**கவனிக்க.-** இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2021 ஆம் ஆண்டுக்கான பொலநறுவை மாவட்டத்திற்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.

*2021.06.11 ஆந் திகதிய 2232 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I: தொகுதி II (ஆ), பகுதி I: தொகுதி III, பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV (அ), பகுதி IV (ஆ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2233 - 2021 ජූනි මස 18 වැනි සිකුරාදා - 2021.06.18

*2233 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1316 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1320 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, யூலை மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, யூன் மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1313-B 82240-5,403 (2021/ 06)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்கருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (III) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (vIII) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xIII) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பல்கலைக்கழக வைத்தியசாலை

## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வெற்றிடங்கள்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினால் பின்வரும் பதவிகளுக்காக தகுதிவாய்ந்த அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*1.* **வைத்திய நிபுணர்கள்**

1. வைத்திய நிபுணர் உடலியல் பொது மருத்துவம்
2. வைத்திய நிபுணர் அவசர சிகிச்சை
3. வைத்திய நிபுணர் உணர்விழப்பு
4. வைத்திய நிபுணர் அதிதீவிர சிகிச்சை
5. இருதய நோயியல் நிபுணர்
6. வைத்திய நிபுணர் குழந்தைகள் இருதயம்
7. இரசாயன நோயியியல் நிபுணர்
8. சிறுநீரகவியல் நிபுணர்
9. குருதி நோயியல் நிபுணர்
10. குடல் இரைப்பை நோயியல் நிபுணர் (சத்திர சிகிச்சை)
11. நரம்பியல் நோய் நிபுணர்
12. குடும்ப மருத்துவ நிபுணர்
13. உட்சுரப்பியல் நோய் நிபுணர்
14. பெண் நோய் மற்றும் மகப்பேற்றியல் நிபுணர்
15. வஸ்குயூலர் சத்திர சிகிச்சை நிபுணர்
16. காது மூக்கு தொண்டை நோய் நிபுணர்
17. சத்திர சிகிச்சை நிபுணர் (சிறுநீரகம், ஈரல், பித்தக்குழாய் மாற்றக் கூடிய இயலுமை)
18. இருதய சத்திர சிகிச்சை நிபுணர்
19. குடல் இரைப்பை நோயியல் நிபுணர்
20. வைத்திய நிபுணர் வாய் மற்றும் முகம் தாடை சத்திர சிகிச்சை
21. பல் சீரமைப்பியல் நிபுணர்

**தகைமைகள்:**

i. 2018 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் கீழ் இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்ட/ பதிவு செய்யப்படக்கூடிய வைத்திய அதிகாரிகள் மற்றும் பல் வைத்தியர்கள்.

அல்லது

ii. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய மருத்துவ அதிகாரிகள்/பல் மருத்துவர்கள்

அல்லது

iii. இலங்கை, கொழும்பு பல்கலைக்கழக மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவக சபையினால் சான்றிதழிக்கப்பட்டதாக குறித்த துறையில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவத்தில் டாக்டர் பட்டம்/சத்திர சிகிச்சையில் டாக்டர் பட்டம் பெற்றிருத்தல் (இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.10.11 ஆந் திகதிய இல: 1883/17 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் இணைப்பு II இல் குறிப்பிடப்பட்ட)

அத்துடன்

iv. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்

*சம்பள அளவுத்திட்டம்:*

MC 1-2- ரூபா (91,645.00 – 12 x 2,700- 124,045.00)

* *தரம் I வைத்திய நிபுணர்கள் MC 1-2 இன் முதலாம் படிநிலையில் வைக்கப்படுவர்.*

**2. வைத்திய அதிகாரி - தரம் I**

**தகைமைகள்:**

i. *வைத்திய அதிகாரியாக செயற்படுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவை உடைய மருத்துவ அதிகாரி*

*அத்துடன்*

ii. *சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனமொன்றில் அல்லது இலங்கை சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையின் "தனியார் வைத்தியசாலைகள், தாதியர் இல்லங்கள் மற்றும் மகப்பேற்று இல்லங்கள்" என்ற வகுதிக்குள் அடங்கும் பதிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் தரம் II மருத்துவ அதிகாரியாக குறைந்தது ஆறு (06) வருட கால அனுபவம்*

*அத்துடன்*

iii. *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.10.11 ஆந் திகதிய 1883/17 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் இணைப்பு II இல் குறிப்பிடப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்பின் படிப்புத் தகைமை*

*அத்துடன்*

iv. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்

*சம்பள அளவுத் திட்டம்:*

MO 1-1 ரூபா (58,675.00 - 3 x 1,375 - 7x 1385 – 2 x 1,910 – 10 x 2,270 - 99,015.00)

* *தரம் I வைத்திய நிபுணர்கள் MO 1-1 ரூபா 78,585.00 இன் 14 ஆம் படிநிலையில் வைக்கப்படுவர்.*

**3. பல் மருத்துவ அதிகாரி -தரம் I**

**தகைமைகள்:**

i. *பல் மருத்துவ அதிகாரியாக செயற்படுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய பல் மருத்துவ அதிகாரி*

*அத்துடன்*

ii. *சுகாதாரஅமைச்சின் கீழுள்ள நிறுவனமொன்றில் அல்லது இலங்கை சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையின் "தனியார் வைத்தியசாலைகள், தாதியர் இல்லங்கள் மற்றும் மகப்பேற்று இல்லங்கள் "என்ற வகுதிக்குள் அடங்கும் பதிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் தரம் II மருத்துவ அதிகாரியாக குறைந்தது ஒன்பது (09) வருடகால அனுபவம்*

*அத்துடன்*

iii. *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.10.11 ஆந் திகதிய 1883/17 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் இணைப்பு II இல் குறிப்பிடப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்பின் படிப்புத் தகைமை*

*அத்துடன்*

iv. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்

*சம்பளஅளவுத்திட்டம்:*

MO 1-1 ரூபா (58,675.00 - 3 x 1,375 - 7x 1385 – 2 x 1,910 – 10 x 2,270 - 99,015.00)

* தரம் I பல் வைத்திய நிபுணர்கள் MO 1-1 ரூபா 78,585.00 இன் 14 ஆம் படிநிலையில் வைக்கப்படுவர்.

**4. வைத்திய அதிகாரி - தரம் II**

**தகைமைகள்:**

i. மருத்துவ அதிகாரியாக செயற்படுவதன் பொருட்டு இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய மருத்துவ அதிகாரியாக இருத்தல்.

அத்துடன்

ii. சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனமொன்றில் அல்லது இலங்கை சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையின் "தனியார் வைத்தியசாலைகள், தாதியர் இல்லங்கள் மற்றும் மகப்பேற்று இல்லங்கள்" என்ற வகுதிக்குள் அடங்கும் பதிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் மருத்துவ அதிகாரியாக குறைந்தது இரு (02) வருடகால அனுபவம்

அத்துடன்

iii. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்

*சம்பள அளவுத் திட்டம்*

MO 1-1 ரூபா (58,675.00 - 3 x 1,375 - 7x 1385 – 2 x 1,910 – 10 x 2,270 - 99,015.00)

* தரம் II வைத்திய அதிகாரிகள் MO 1-1 ரூபா 64,185.00 இன் 5 ஆம் படிநிலையில் வைக்கப்படுவர்.

**5. பல் வைத்திய அதிகாரி - தரம் II**

**தகைமைகள்:**

i. பல் மருத்துவ அதிகாரியாக செயற்படுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய பல் மருத்துவ அதிகாரி

அத்துடன்

ii. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்

*சம்பளஅளவுத்திட்டம்*

MO 1-1 ரூபா (58,675.00 - 3 x 1,375 - 7x 1385 – 2 x 1,910 – 10 x 2,270 - 99,015.00)

* தரம் II பல் வைத்திய அதிகாரிகள் MO 1-1 ரூபா 58,675.00 இன் 1 ஆம் படிநிலையில் வைக்கப்படுவர்.

**6. வைத்திய அதிகாரி - ஆரம்பத் தரம்**

**தகைமைகள்:**

i. மருத்துவ அதிகாரியாக செயற்படுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய மருத்துவ அதிகாரி

அத்துடன்

ii. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்

*சம்பள அளவுத் திட்டம்*

MO 1-1 ரூபா (58,675.00 - 3 x 1,375 - 7x 1385 – 2 x 1,910 – 10 x 2,270 - 99,015.00)
* ஆரம்பத்தர வைத்திய அதிகாரிகள் MO 1-1 ரூபா 60,050.00 இன் 2 ஆம் படிநிலையில் வைக்கப்படுவர்.

**பொது நிபந்தனைகள்:**

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. பல்கலைக்கழக நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்படும் எந்தவொரு பிரதேசத்திலும் அத்துடன் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலை பதவிக்குரித்தான கடமைகளை புரியும் பொருட்டு உடல் உள வலிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. நல்லொழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

iv. விண்ணப்பம் முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

v. இந்தப் பதவிகள் நிரந்தரமானவை என்பதுடன் ஆரம்பதர – மருத்துவ துறை சாராத உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன், ஏனைய விசேட தரப் பதவிகள் மற்றும் அரசாங்க சேவையிலுள்ள மருத்துவ நிபுணர், மருத்துவ அதிகாரி தரம் I, பல் மருத்துவ அதிகாரி தரம் I, மருத்துவ அதிகாரி தரம் II, பல் மருத்துவ அதிகாரி தரம் II ஆகியோர் ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும்.

vi. வைத்திய பீடத்தின் பீடாதிபதி மற்றும் இணைந்த சுகாதார பீடத்தின் பீடாதிபதி ஆகியோர்களின் மேற்பார்வையின் கீழ் வைத்தியபீட மற்றும் இணைந்த சுகாதாரபீட மாணவர்களுக்கு கற்பிப்பதற்கும் பயிற்சியளிப்பதற்கும் மருத்துவ நிபுணர்கள் தேவைப்படுத்தப்படலாம்.

vii. ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) ஊழியர் 10 % பங்களிப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் 15 % ஊழியர் சேமலாப நிதியும் (EPF), 10 % ஊழியர் நம்பிக்கை நிதியும் (ETF) பல்கலைக் கழகத்தினால் பங்களிப்புச் செய்யப்படும்.

viii. எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்களை தேர்ந்தெடுத்து பட்டியலிடுவதற்கான உரிமையை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.

ix. சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டு இணைக்கப்பட்டு "நிறைவேற்றுப் பணிப்பாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்லாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலை, வேரஹெர" என்ற முகவரிக்கு 2021.07.18 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பித்த பதவியை கடித உறையின் இடதுபக்க மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

x. சரியாக பூரணப்படுத்தப்படாத அல்லது காலதாமதமாகி அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்களும் குறிப்பிடப்பட்டதற்கிணங்க தயாரித்து அனுப்பாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

xi. விண்ணப்பம் மற்றும் ஏனைய தகவல்களை கொபாப வலைத் தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

www.kdu.ac.lk

ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வுபெற்ற),
டப்டப்வீ ஆர்டப்பீ ஆர்எஸ்பீ யூஎஸ்பீ என்டீசீ பீஎஸ்சீ எம்பில்
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

## திருத்தம்

### நீதிச்சேவை ஆணைக்குழு

*அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் மேன்முறையீட்டு நீதிமன்ற பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளுதல் - 2021*

1. 2088/26 ஆம் இலக்கமுடைய 2018.09.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அட்டவணைப்படுத்தப்பட்ட அரச உத்தியோகத்தர் சேவையின் மேன்முறையீட்டு நீதிமன்ற பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளுவதற்காக தகைமையுடைய இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோருவதற்கான அறிவித்தலொன்று இலக்கம் 2228 மற்றும் 13.05.2021 ஆந் திகதியுடைய வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியினை தற்போது நடைமுறையில் உள்ள பயணக்கட்டுப்பாடு நிலையினை கருத்தில் கொண்டு நீடிப்பதற்கு நீதிச்சேவை ஆணைக்குழுத் தீர்மானித்துள்ளது.

2. அதன் அடிப்படையில் அவ் அறிவித்தலின் 10 ஆவது பந்தியானது கீழ்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

அ) விண்ணப்பப்படிவ கட்டணம் ரூ. 500.00 வை “நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்” பெயரில் மக்கள் வங்கி, டாம் வீதிக் கிளையில் பேணிச் செல்லப்படும் 297 100 199 025 039 கணக்கிற்கு எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பதாரியின் பெயர் முகவரி எழுதப்பட்ட 9 x 4 அங்குல அளவுடைய கடித உறையுடன் பதிவுத்தபாலில் அனுப்புவதினூடாக அல்லது நேரடியாக வந்து ஒப்படைப்பதன் மூலம் விண்ணபபடிவத்தினை பெற்றுக்கொள்ள முடியும். அல்லது அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் பணம் வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை ஒட்டி அனுப்பவும் முடியும்.

ஆ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 09.07.2021 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கும் வகையில் “செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம், கொழும்பு 12” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்திற்கு விண்ணப்பதாரி நேரடியாக வருகை தந்து விண்ணப்பப்படிவங்களை கையளிக்க வேண்டும்.

3. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மாற்றங்களின்றி செல்லுபடியாகும்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச். எஸ். சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்தில்,
2021, யூன் 17.

6-353

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## திருத்தம்

### வெளிநாட்டமைச்சு

*இலங்கை வெளிநாட்டுச் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2020 (2021)*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2021.04.09 ஆந் திகதிய மற்றும் 2021.05.21 ஆந் திகதிய வர்த்தமானி இலக்கங்கள் முறையே 2223 மற்றும் 2229 ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்ட “இலங்கை வெளிநாட்டுச் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2020 (2021)” அறிவித்தலின் “பகுதி I: தொகுதி (II அ) விளம்பரங்கள்” இலுள்ள பின்வரும் திருத்தங்களை அரசாங்க சேவை ஆணைக்குழு அங்கீகரித்துள்ளது.

### திருத்தம்

மேற்படி அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வெளிநாட்டுச் சேவை ஆட்சேர்ப்புப் பரீட்சைக்காக விண்ணப்பங்களை அனுப்புவதற்கான கடைசித் திகதியானது, கொவிட் - 19 நோய்ப்பரவலினால் தற்போது நடைமுறையிலுள்ள பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் 2021.07.15 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2021.04.09 ஆந் திகதிய 2223 ஆம் இலக்க அறிவிப்பின் பிரிவு 4 இல் குறிப்பிடப்பட்ட அதிகபட்ச வயதெல்லையானது, மூல வர்த்தமானி அறிவித்தலில் கொடுக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கான முன்னைய முடிவுத் திகதியின்படியே (அதாவது : 2021.05.10) இருக்கும்.

அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே,
செயலாளர்,
வெளிநாட்டமைச்சு.

வெளிநாட்டமைச்சு,
குடியரசுக் கட்டிடம்,
கொழும்பு 01,
2021, யூன் 11.

6-277

---

### கல்வி அமைச்சு

நாட்டின் தேசிய பாடசாலைகளில் வெளிநாட்டு மொழிகளை கற்பிப்பதற்காக இலங்கை ஆசிரிய சேவையின் 3-1(அ) தரத்திற்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை -2021

நாட்டின் தேசிய பாடசாலைகளில் வெளிநாட்டு மொழிகளை கற்பிப்பதற்காக இலங்கை ஆசிரிய சேவையின் 3-1(அ) தரத்திற்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்கன விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் "Our Service" இன் கீழ்க் காணப்படும் "Online Applications Institutional Exams" ஊடாக பிரசுரிக்கப்பட்டிருப்பதுடன், விண்ணப்பப்படிவங்கள் இணையவழி மூலமாக (Online) மாத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் இணையவழி ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதை பதிவிறக்கம் செய்து அச்சிடப்பட்ட பிரதியில் உரிய பகுதிகளை கையெழுத்தில் நிரப்பி விண்ணப்பதாரரின் ஒப்பத்தை உறுதிப்படுத்தி இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரிப் படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2021.08.13 ஆந் திகதி திகதி அல்லது அதற்கு முன்னதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், தாபன பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுக் தபாலில் அனுப்புதல் வேண்டும். மேலும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நாட்டின் தேசிய பாடசாலைகளில் வெளிநாட்டு மொழிகளை கற்பிப்பதற்காக இலங்கை ஆசிரிய சேவையின் 3-1(அ) தரத்திற்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை -2021" எனக் கட்டாயமாக குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதி நாள் 2021.08.13 ஆகும்.

**குறிப்பு**: விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பிலான கடிதம் தபாலில் காணாமல் போனதாக,தாமதமாகியதாக செய்யப்படும் முறைபாடுகள் கவலனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதிநாள் வரையில் விண்ணப்பப்படிவங்களை தாமதமாக்குவதினால் ஏற்படும் விளைவுகளை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**02. சேவைக்கு ஆட்சேர்க்கப்படும் முறைமை:**

2.1 பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சையில் சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்றி ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% வீதமான குறைந்தபட்ச புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களின் மொத்த புள்ளிகளின் முன்னுரிமைக்கமைய பொது நேர்முகத்தேர்வொன்றுக்கு முன்னிலைப்படுத்தி,பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட முறைமைக்கமைய நிலவும் வெற்றிட எண்ணிக்கைகளுக்கமைவாக ஆட்சேர்ப்புச் செய்தல் மேற்கொள்ளப்படும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் காணப்படும் தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையின்போது நிராகரிக்கப்படுவார்கள்.

2.2 பொது நேர்முகப்பரீட்சையில் தகைமைப் பெறுவோர் தொழிலில் முக்கியமாகக் கருதப்படும் கற்றல் மற்றும் கற்பித்தல் முறைமை தொடர்பான திறனை அளவிடுவதற்காக இந்த வர்த்தமானி அறிவித்தலின் 13.3 வாசகத்திற்கமைவாக

பிரயோகப் பரீட்சைக்குட்படுத்தப்பட்ட பின்னர், விண்ணப்பதாரர்களினால் பிரயோக பரீட்சையில் பெறப்பட்ட மொத்த புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட முறைமைக்கமைய நிலவும் வெற்றிட எண்ணிக்கைகளின் படி ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

2.3 நேர்முகப் பரீட்சை சந்தரப்பத்தின்போது விண்ணப்பதாரர்களுக்கு உரிய வெற்றிடங்கள் தொடர்பான ஆவணங்கள் காட்சிப்படுத்தப்படும். அவற்றின் பிரகாரம் விண்ணப்பதாரர்களினால் அச்சந்தர்ப்பத்தில் வெற்றிடங்கள் நிலவும் பாடசாலை தொடர்பாக தமது நியமனத்தை பெற்றுக்கொள்வதற்குள்ள விருப்பினை தொடரொழுங்கில் குறிப்பிட வேண்டும்.

**குறிப்பு :**

ஒரே பாடசாலைக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் சிலர் சமமான புள்ளிகளை பெற்றிருக்கும் தருணங்களில் தகைமை பெற்றவர்களை கல்வி அமைச்சுச் செயலாளரினால் அனுமதிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட புள்ளி வழங்கும் நடைமுறை விதிகளுக்கமைய பொருத்தமான விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

2.4 இந்த வெற்றிடங்கள் தொடர்பாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவது பாடசாலை முறைமையின் அடிப்படையில் என்பதால் 08 வருடங்கள் பூர்த்தியாகும் வரையில் எவ்விதத்திலும் இடமாற்றங்கள் வழங்கப்பட மாட்டாது.

2.5 வெற்றிடப் பட்டியல்

| மாகாணம் | மொழி ஆய்வு கூடங்கள் | வெற்றிடங்கள் மற்றும் புதிய ஆசிரியர்களின் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பிரெஞ்சு | ஜப்பானிய | சீன | கொரிய | இந்தி | ஜெர்மன் |
| மேல் | 134 | 11 | 10 | 30 | 15 | 05 | 10 |
| மத்திய | 155 | 10 | 10 | 25 | 15 | 05 | 15 |
| தென் | 110 | 10 | 10 | 40 | 20 | 05 | 15 |
| வடக்கு | 91 | 05 | 07 | 18 | 18 | 05 | 10 |
| கிழக்கு | 104 | 10 | 10 | 25 | 20 | 05 | 15 |
| வடமேல் | 127 | 10 | 10 | 25 | 25 | 05 | 10 |
| வடமத்திய | 83 | 10 | 10 | 20 | 25 | 05 | 15 |
| ஊவா | 88 | 10 | 10 | 20 | 20 | 05 | 10 |
| சப்ரகமுவ | 113 | 10 | 10 | 20 | 20 | 05 | 10 |
| மொத்தம் | 1005 | 86 | 87 | 223 | 178 | 45 | 110 |

## 03. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்

i. இப்பதவி நிரந்தரமானதாகும். தங்களுக்குரிய ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்படல் வேண்டும்.

ii. இப்பதவிக்கு நியமனம் பெறுபவர்கள் (03) ஆண்டு தகுதிகாண் காலத்திற்குட்பட வேண்டியதுடன், அந்த 03 வருடத்திற்குள் முதலாவது வினைத்திறன்கான் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

iii. பொது நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் அத்துறைசார் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சியினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

iv. அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைக்கும், அரச நிதி பிரமாணங்களுக்கும் , திணைக்களங்கள் சார் ஏனைய நிபந்தனைகளுக்கும் இந்நியமனம் உட்படும்.

v. 2014.10.23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1885/38 ஆம் அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை ஆசிரிய சேவை பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கும் அந்த பிரகடனத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் அரசாங்க சேவை நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளுக்கும் இந்நியமனம் உட்படும்.

## 04. சம்பள அளவுத் திட்டம்:

இந்நியமனத்திற்கு பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016ஆம் இலக்கத்தைக் கொண்ட சம்பள சுற்றறிக்கைக்கு அமைவாக GE 01-2016 இல் ரூபா 27,740.00 - 300x6 - 380 x 7 - 445 x 2- ரூபா 33,090.00 (மாதாந்த) சம்பளம் உரித்தாகும். நியமனதாரர்கள் இச்சம்பள முறையின் 14 ஆவது படியான ரூ. 32,200.00 முறையில் அமர்த்தப்படும். சம்பளம் வழங்குதல்

மேற்கொள்ளப்படுவது அந்த சுற்றறிக்கையின் 11 உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாகவே ஆகும். இதற்கு மேலதிகமாக அரச உத்தியோகத்தர்களுக்கு அரசினால் காலத்திற்கு காலம் செலுத்தப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

**05. கல்வித் தகைமைகள்**

5.1 இலங்கை கல்விச் சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் இலக்கம் அப/19/1412/127/011-I மற்றும் 2019.07.19 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி 2021.08.13 ஆந் திகதிக்கு பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(I) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உள்நாட்டு/வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் பட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்ட, உரிய பாடம் (வெளிநாட்டு மொழி) பட்டம் தொடர்பில் ஒரு பாடமாக கற்றுக்கொள்ளப்பட்ட அல்லது உரிய பாடத்தில் சிறப்பு பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

**குறிப்பு** - ஒவ்வொரு விண்ணப்பதாரரும் மேற்படி தகைமைகளுக்கு மேலதிகமாக க.பொ.த. (சா.தர) பரீட்சையின் போது சிங்கள மொழி அல்லது தமிழ் மொழியை ஒரு பாடமாக சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**06. வயதெல்லை:-**

விண்ணபப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு 18 வயது பூர்த்தி செய்யப்பட்டிருப்பதுடன், 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதற்கமைவாக 2003.08.13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக மற்றும் 1986.08.13 ஆந் திகதிக்கு அல்லது அதற்குப்பின் பிறந்த தினத்தை கொண்டிருப்பவர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்கலாம்).

**07. ஏனைய தேவைகள்:**

i. விண்ணபதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

ii. விண்ணபதாரர்கள் சிறந்த ஒழுக்கத்தை கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

iii. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி திகதிக்கு, பதவிக்கு ஆட்சேர்த்தல் தொடர்பாக தேவைப்படும் அனைத்து தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

iv. சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உளவியல் தன்மையுடன் இருத்தல் வேண்டும்.

**08. பரீட்சை நிபந்தனைகள்:**

8.1 இணையவழி (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். விண்ணப்பதாரியினால் இணையவழி மூலமாக முன்னிலைப்படுத்தப்பட்ட மென்மையான நகல் மற்றும் பதிவுத் தபாலில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அச்சிடப்பட்ட பிரதி (printout) இரண்டுமே பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற பின்னர் அந்த மென்மையான பிரதி மற்றும் அச்சிடப்பட்ட பிரதி சரிபார்க்கப்படுவதுடன் (verification) செல்லுபடியாகும் விண்ணப்பமாக திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டதென/பொறுப்பேற்கபடவில்லை என முறைமைக்கு பிரவேசிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி யொன்றை (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் மூலமாக அறிவிக்கப்படும். இணையவழி விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்படுவதற்கு முன் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்ட பொது ஆலோசனை படிவம் (Common Instructions) பதிவிறக்கம் செய்துக்கொள்ளவும். விண்ணப்பங்களை நிரப்பும்போது இந்த ஆலோசனைகளை கண்டிப்பாக பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியொன்றை பெற்றுக்கொண்ட பின்னர், அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தங்களும் செல்லுபடியாகும் திருத்தங்களாக கருதப்படமாட்டாது. முழுமையற்ற விண்ணப்பங்கள் அறிவித்திலின்றி நிராகரிக்கப்படும்.

8.2 பரீட்சை நடைமுறை விதிகள்

I. இந்த பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் நடைபெறுவதுடன், விண்ணப்பங்களின் எண்ணிக்கையினை கருத்திற்கொண்டு நடாத்தப்படும் இடம் தீர்மானிக்கப்படும்.

II. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இந்த பரீட்சையின் சகல வினாத்தாள்களுக்கும் ஒரு மொழி மூலத்தில் தோற்ற வேண்டும். அந்த மொழி மூலம் தமது நியமனத்திற்குரிய மொழி மூலமாக இருத்தல் வேண்டும்.

III. ஒரு விண்ணப்பதாரிக்கு தமது விண்ணப்பப்படிவத்தில் காணப்படும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

IV. பரீட்சை இரண்டு (02) வினாத்தாள்களைக் கொண்டதாகும். ஒவ்வொரு விண்ணப்பதாரியும் (02) வினாக்களுக்கும் தோற்ற வேண்டும். சித்திபெறுவதற்கு ஒவ்வொரு வினாத்தாளுக்கும் குறைந்த பட்சம் 40% புள்ளிகள் பெறுவது கட்டாயமாகும்.

V. ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எணணிக்கை நியமன அதிகாரிகளினால் தீர்மானிக்கப்படும்.

8.3 ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு விண்ணப்பப்படிவம் மாத்திரம் முன்னிலைப்படுத்த முடியும்.

8.4 விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரரின் ஒப்பம் உறுதிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும். ஏதேனும் அரச நிறுவனமொன்றினால் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் தமது ஒப்பத்தை நிறுவனப் பொறுப்பாளர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்படும் உத்தியோகத்தர் ஊடாகவும், அவ்வாறின்றேல் விண்ணப்பதாரர் தமது ஒப்பத்தை அரச பாடசாலை அதிபர்/ஓய்வபெற்ற உத்தியோகத்தர், கிராம அலுவலர் /சமாதான நீதவான்/சத்திய ஆணையாளர/சட்டத்தரணி/பகிரங்க நொத்தாரிசு/முப்படை அதிகாரத் தரத்தில் உள்ள உத்தியோகத்தர், அரச அல்லது மாகாண சேவையில் அல்லது நிரந்தர பதவி வகிக்கும் உத்தயோகத்தர் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது தலைமைத் தேரர் / அல்லது ஏனைய சமயங்களின் சமயத் தலைவர்கள் அல்லது வணக்கஸ்தலம் ஒன்றுக்கு பொறுப்பான தரத்தைக் கொண்ட ஒருவர் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

8.5 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டோர் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற முன்தீர்மானங்களுக்கமைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வாதெல்லையில் விண்ணப்பப்படிவத்தை பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னால் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி விண்ணப்பப்படிவத்தை சரியாக இணையவழி மூலமா முன்னிலைப்படுத்தி விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட பிரதியை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படும். பரீட்சை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டவுடன் அதுபற்றி பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் பிரசுரமாகி 02 அல்லது 03 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி பத்திரம் கிடைக்காத விண்ணப்பதாரர்கள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்புக் கிளையுடன் தொடர்பு கொண்டு வினவ வேண்டும். அவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரர் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை மற்றும் முகவரியை சரியாக குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்புக்கு வெளிப்பிரதேசத்தில் வசிப்பவராயின் அவ்விபரங்களுடன் பெக்ஸ் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை துரிதகதியில் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் விண்ணப்பதாரரின் பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கை கடிதம் ஒன்றை 011-2784232 எனும் பெக்ஸ் இலக்கத்திற்கு அனுப்பி வினவுவது பயன்மிக்கதாகும் அவ்வாறு வினவும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் தகவல் ஒன்றை உறுதிப்படுத்துவதற்காக தம்மிடம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, மற்றும் விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதி, தபாலிடும்போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டினை தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாக அமையும்.

**09. பரீட்சைக்குத் தோற்றுதல்**

9.1 முறையாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்கும் பரீட்சார்த்தி பரீட்சை மண்டப பொறுப்பாளருக்கு தமது ஒப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பித்து பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படாத பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது.

9.2 பரீட்சார்த்திகள் தமக்கு உத்தரவிடப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். சகல பரீட்ச்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதிப்பத்திரத்தில் ஒப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டு முதலில் அம்மண்டபத்தில் உள்ள மண்டப பொறுப்பாளருககு கையளிக்க வேண்டும். பரீட்சை நடாத்தப்படுதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் உட்பட வேண்டும். அந்த சட்டதிட்டங்கள் மீறப்படும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு உட்பட நேரிடும்.

**குறிப்பு** – பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவர், பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவி வகிப்பதற்கு தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதுவதற்கு அல்ல என்பதுடன், பரீட்சையில் சித்தியடைதல் நியமனம் பெறுவதற்குத் தகுதியாகும் எனவும் கருதப்படமாட்டாது.

**10. விண்ணப்பதாரர்களின் ஆளடையாளங்கள்**

(i) பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையக்கூடியவாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

i. தேசிய ஆளடையாள அட்டை;

ii. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு;

iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்துடன் பரீட்ச்சார்த்திகள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியவாறு முகம் மற்றும் காதுகள் மூடப்படுவதை தவிர்த்து பரீட்சை ண்டபத்திற்குள் சமூகமளிக்க வேண்டும். அவ்வாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு மறுப்பு தெரிவிக்கும் பரீட்ச்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிக்கும் தருணம் முதல் பரீட்சை முடிவுற்று வெளியேறும் வரையில் பரீட்சை அதிகாரிகளுக்கு பரீட்ச்சார்த்தியை அடையாளம் காணக்கூடிய வகையில் முகம் மற்றும் காதுகள் மூடப்படுவதை தவிர்க்க வேண்டும்.

**11. உண்மைக்கு புறம்பான தவல்களை வழங்குதல்**

விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது மிகுந்த கவனத்துடன் உண்மையான தகவல்களை வழங்க வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர் தகைமையற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் வேளையில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி அந்தஸ்த்தை இரத்துச் செய்வதற்கு இடமுண்டு.

**12. பாட விதானம்**

12.1 எழுத்து மூலப் பரீட்சை

இப்பரீட்சைக்குரிய வினாப்பத்திரங்கள் இரண்டாகும். சகல விண்ணப்பதாரர்களும் அவ்வினாப்பத்திரங்கள் இரண்டுக்கும் தோற்றுதல் கட்டாயமாகும்.

(i) நுண்ணறிவு—நேரம் 01 மணித்தியாலம் (100 புள்ளிகள்)

புள்ளிவிவர, மொழியியல் மற்றும் உருவவியல் கட்டமைப்பு மற்றும் இடைத் தரப்புக்குரியவாறு முன்வைக்கப்படும் முரண்பாடுகள் தொடர்பில் பகுப்பாய்வுத் திறன், தர்க்கரீதியான புரிந்துணர்வு, விளக்கும் திறமை, பிற சூழ்நிலைகளுக்கு உரித்தாக்கிக் கொள்ளும் இயலுமை, அளவு, நேரத்திற்கும் இடத்திற்கு இடையில் உள்ள இணைப்பைப் புரிந்துகொள்ளும் போது பரீட்சார்த்திக்குள்ள திறமையை அளவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பல்தேர்வுகள்/குறுகிய பதில்கள் வழங்கும் வகையிலான 50 கேள்விகளைக் கொண்டதாகும். எல்லா கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டும்.

(ii) பொது அறிவு - நேரம் 01 மணித்தியாலம் (100 புள்ளிகள்)

ஆசிரிய துறைக்குரியதாக அத்துறை தொடர்பிலான பொது அறிவு மற்றும்/ அல்லது உள்நாட்டு ரீதியல் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் மேற்கொள்ளப்படும் கல்வி போக்கு தொடர்பான பொது அறிவு மற்றும் கல்வி, உயர் கல்வி, தொழில்நுட்ப ஆசிரியர் கல்வி போன்ற துறைகள் தொடர்பாக 2010 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட நவீன்மயப்படுத்தல் தொடர்பான பொது அறிவை பரிசீலிக்கும் பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கக் கூடிய வகையில் 50 வினாக்களைக் கொண்டமைந்திருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்

* இணைப்பு 01 பார்க்கவும்.

12.2 பொதுவான நேர்முகப்பரீட்சை

பொதுவான நேர்முகப்பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**குறிப்பு -** நிறைவேற்றிக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள்

ஆசிரிய தொழிலில் முக்கியமாகக் கருத்தப்படும் கற்றல் கற்பித்தல் செயற்பாடு தொடர்பான திறன்களை மதிப்பிடுதல்.

12.3.1 பிரயோக பரீட்சை முறைமை

(i) பிரயோக பரீட்சைக்காக 05 நிமிடங்களுக்கும் குறைவான காலம் வழங்கப்படும்.

(ii) பிரயோக பரீட்சைக்காக பெறப்படவேண்டிய உச்சக்கட்ட புள்ளிகளின் எண்ணிக்கை 25 ஆகும்.

(iii) பிரயோக பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு தேர்வளவுகள் தொடர்பாகவும் 02 புள்ளிகள் வீதம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) பிரயோக பரீட்சையின் மதிப்பீடு கல்வி விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவொன்றினால் மேற்கொள்ளப்படும்.

12.3.2 தேர்வளவுகளின் குறிக்கோள்கள்

(i) நோக்கம் மற்றும் பிரவேசம்

வெற்றிகரமாக பாடத்தின் குறிக்கோள்களை தெளிவுபடுத்தல் மற்றும் பாடத்திற்கு பிரவேசிக்கும் இயலுமையை மதிப்பிடுதல்

(ii) ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு

ஒரு ஆசிரியராக சிறந்த ஆளுமையுடன் மற்றும் கற்பித்தலின்போது சிறந்த குரல் கட்டுப்பாட்டின் இயலுமையை மதிப்பிடுதல்.

(iii) தொடர்பாடலின் தெளிவுகள்

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின்போது உரிய விடயங்களை விளைத்திறனுடன் தொடர்பு கொள்ளும் திறனை மதிப்பிடுதல்.

**13. பரீட்சைக் கட்டணம்**

13.1 பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணங்களை செலுத்தும்போது இணையவழி மூலமாக வழங்கப்படும் பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைமையின் கீழ் மாத்திரம் செலுத்தல்களை மேற்கொள்ள வேண்டும்.

i. எந்தவொரு வங்கி கடன் அட்டை மூலமாக (Any Bank Credit Card).

ii இணையத்தளங்கள் ஊடாக செலுத்தும் வசதிகள் உள்ள வங்கி பற்று அட்டைகள் மூலம் (Through any bank debit cards with internet transaction facilities)

iii இலங்கை வங்கி ஒன்லைன் வங்கி முறை (Bank of Ceylon online Banking Method).

iv எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலமாக (Bank of Ceylon Teller Slip Payments).

v தபால் திணைக்களத்தின் எந்தவொரு தபால் நிலையம் மூலமாக (Postal Department Payment at any Post Office)

**குறிப்பு**: மேற்படி முறையின் மூலமாக கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் முறை தொடர்பான ஆலோசனைகள் வலைத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப ஆலோசனையின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

13.2 செலுத்தல்கள் கிடைக்கப்பெற்றதை (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் மூலமாக அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்குரிய முழுத்தொகையையும் செலுத்த வேண்டியதுடன், பரீட்சைக் கட்டணங்கள் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்படி முறைகளின் ஊடாக பரீட்சைக் கட்டணம் செலுத்தும்போது ஏற்படும் பிழைகள் தொடர்பான பரீட்சைத் திணைக்களம் பொறுப்புக் கூறாது.

13.3 பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் எந்தவொரு காரணத்தினாலும் மீள்செலுத்துவதற்கு/வேறு பரீட்சைக்காக மாற்ற முடியாது.

**14. பரீட்சைப் பெறுபேறுகள்**

14.1 எழுத்துமூலப் பரீட்சையில் மொத்த புள்ளிகளின் முன்னுரிமைக்கமைய தயாரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரர்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகளை அறிவித்தல் அல்லது என்ற www.results.exam.gov.lk இணையத்தளம் ஊடாக பகிரங்கப்படுத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**15. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கான ஆலோசனைகள்**

விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது பின்வரும் உப அட்டவணை 1 மாத்திரம் பயன்படுத்தவும்.

**உப அட்டவணை 01**

| வெளிநாட்டு மொழி | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| பிரெஞ்சு | 1 |
| ஜப்பானிய | 2 |
| சீன | 3 |
| கொரியா | 4 |
| இந்தி | 5 |
| ஜெர்மன் | 6 |

16. தற்போது அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு 14 இன் கீழ் தமது திணைக்களப் பொறுப்பாளர் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.

17. நேர்முகப்பரீட்சைக்காக குறிப்பிட்ட தினத்தில் பங்கேற்காத விண்ணப்பதாரர்கள் தொடர்பில் எக்காரணம் கொண்டும் மீளக் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

18. அத்துடன் நேர்முகப்பரீட்சை தினமன்று சகல சான்றிதழ்களையும் சமர்ப்பிக்க வேண்டியதுடன் பின்னர் சமர்பிக்கப்படும் எந்தவொரு சான்றிதழும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

19. இந்த அறிவித்தலில் உட்படாத விடயங்கள் இருப்பின் அது தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் உரிமையும் ஏதேனும் வெற்றிடங்களின் ஒரு பகுதி அல்லது முழுமையாக நிரப்புதல் அல்லது நிரப்பாமல் இருப்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளருக்குரியதாகும்.

20 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழி வாசகங்களுக் கிடையில் ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானதெனக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

பேராசிரியர் கே. கபில சீ. கே. பெரேரா,
செயலாளர்.

கல்வி அமைச்சு,
இசுருபாய,
பெலவத்த, பத்தரமுல்ல,
2021, ஏப்பிறல் 23.

6-278

---

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு

**பதிவாளர் நாயகத் திணைக்களம்**

**பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை தரத்தின் I வகுப்பின் III ஆவது தரத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின் கீழ் ஆட்சேர்த்தல் - 2015(2020)**

பதிவாளர் சேவையின் I வகுப்பின் III ஆவது தரத்தில் நிலவும் 13 வெற்றிடங்களினை நிரப்பல் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக 2015.05.26. ஆந் திகதியில் இந்த திணைக்களத்தில் பதிவாளர் சேவையில் II ஆம் வகுப்பில் தகைமை பெற்ற அலுவலர்களில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களின் பிரகாரம் விண்ணப்பம் கோரப்படும். இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப்படிவத்திற்கிணங்க விண்ணப்பத்தின் கீழ்க் குறிப்பிடப்பட்ட திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "பதிவாளர் நாயகம், பதிவாளர் நாயகத் திணைக்களம், இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை, பத்தரமுல்லை" என்னும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் இடப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "பதிவாளர் சேவையின் I வகுப்பின் III ஆவது தரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின் கீழ் ஆட்சேர்த்தல் - 2015(2020)" என தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். மேலும், விண்ணப்பத்தினை தயாரிக்கும் பொழுது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்ட பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதியிருத்தலும் அவசியமாகும்.

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021.07.19

**குறிப்பு**- விண்ணப்பப்படிவம் நேரடியாக கையளிக்க இயலுமை இல்லை என்பதுடன் விண்ணப்பம் அல்லது அது சம்பந்தமான கடிதம் தபாலில் காணாமல் போனதாக அல்லது தாமதித்ததாக மேற்கொள்ளப்படும் முறையீடுகள் கருத்திற் கொள்வதற்கான

இயலுமை இல்லை. இறுதித் தினம் விண்ணப்பம் தாமதம் காரணமாக நிகழக்கூடிய நஷ்டத்தினை விண்ணப்பாதாரியே பொறுப் பேற்க வேண்டும்.

*01.* **சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான முறைமை.-**

*பரீட்சை ஆணையாளர் நாயகம் மூலம் நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சையின் பெறுபேறுககளின் அடிப்படையில், ஒவ்வொரு வினாப்பத்திரத்திரற்காகவும் 40% அல்லது அதனைவிட அதிகப் புளளிகளினை பெறும் விண்ணப்பதாரிகளில் கூடிய புள்ளிகள் பெறும் ஒழுங்கிற்கிணங்க ஆட்சேர்க்கப்படும். விண்ணப்பதாரிகளின் தகைமைகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் நேர்முகப்பரீட்சை சபையினால் பரீட்சித்துப் பார்க்கப்படும். நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நடைமுறைக்கு வரும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கு இணங்கத் தீர்மானிக்கப்படும்.*

*02.* **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்.-**

i. *இந்தப் பதவி நிரந்தரமானதும் மற்றும் ஓய்வூதியச் சம்பளத்துடன் கூடியதுமாகும். விதவைகள் மற்றும் அநாதைகள்/ தபுராரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பங்களிப்புத் தொகையினை செலுத்துதல் வேண்டும்.*

ii. *ஆட்சேர்க்கப்படும் அலுவலர்கள் ஒரு வருடம் பதில் கடமையாற்றும் காலத்திற்கு உட்படுவர்.*

iii. *அரசாங்க நிருவாக சுற்று நிருபம் 1/2014 இற்கிணங்க உரிய மட்டத்தில் மொழி தேர்ச்சியினை பதவியில் சேர்ந்து 5 வருடங்களுக்குள் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.*

iv. *அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்படு சட்டத்திட்டங்களுக்கும், ஆட்சேர்க்கும் முறைமையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கும், இந்த நியமனம் உட்படும்.*

v. *பதிவாளர் சேவையின் I வகுப்பின் III ஆவது தரத்திற்கு நியமிக்கப்பட்டு மூன்று (3) வருடங்கள் முடிவடைவதற்கு முன்பதாக ஆட்சேர்க்கும் முறைமையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் 1 ஆவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்திப்பெறல் வேண்டும்.*

vi. *இந்த நியமனத்திினைப் பெறுவதற்கு தகைமைப் பெறும் மொழி ஊடகமாவது, தங்களால் விண்ணபத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலமாகும்.*

*03.* **சம்பள அளவுத்திட்டம்.-**

*2016.02.25 ஆந் திகதிய இலக்கம் 03/2016 உடைய அரசாங்க நிருவாக சுற்று நிருபத்தில் அட்டவணை I இணங்க இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 47,615.00-10×1,335-8×1,630 - 17 × 2,170 - ரூபா 110,895.00 ((SL-1-2016) ஆகும்.*

*04.* **தகைமைகள்.-**

*அனுபவம்*

(அ) *பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் பதிவாளர் சேவையில் II ஆவது வகுப்பில் நிரந்தரப்படுத்தப்பட்டிருத்தல்.*

(ஆ) *பதிவாளர் சேவையில் II வகுப்பில் 03 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தினை பூர்த்தி செய்திருத்தல்.*

(இ) *விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தல் மூலம் நியமப்படுத்தப்பட்ட தினத்தில் இறுதி ஐந்து (5) வருடங்களினுள் திருப்திகரமான சேவைக்காலத்தின பூர்த்தி செய்திருத்தல்.*

*வயது - உரித்தற்றது.*

*05.* **உடற் தகைமைகள்.-**

*அனைத்து பரீட்சார்த்திகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் கடமையாற்றுவதற்கும் பதவியின் கடமையினை நிறைவேற்றுவதற்கும் போதுமானளவு உடல் மற்றும் மனநல தமைமையுடையவராயிருத்தல் வேண்டும்.*

*06.* **வேறுத் தகைமைகள்.-**

i. *விண்ணப்பதாரர் சிறந்த நடத்தையுடையவராயிருத்தல் வேண்டும்.*

ii. *பதவியுயர்த்தப்படும் தினத்திற்கு கிட்டிய ஐந்து (5) வருடங்களினுள் மகிழ்ச்சிகரமான சேவைக் காலத்தினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.*

iii. ஆட்சேர்ப்பதற்காக தேவையான அனைத்து தகைமைகள் 2015.05.26 ஆந் திகதியில் அனைத்து விதத்திலும் பூர்த்து செய்திருத்தல் வேண்டும்.

07. **எழுத்துப் பரீட்சை.-**

i. இந்தப் பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

ii. பரீட்சை மும்மொழிகளிலும் நடாத்தப்படும்.

iii. கோரப்படும் மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| வினாப்பத்திரம் | காலம் | மொத்தப்புள்ளிகள் | சித்தி புள்ளிகள் |
|---|---|---|---|
| ஆவணங்கள் பதிவு செய்தல் மற்றும் உரித்துப் பதிவு செய்தல் | 3 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் | 3 மணித்தியாலங்கள் | 100 | 40 |

v. விடய சிபாரிசு

| வினாப்பத்திரத்தின் பெயர் | விடய சிபாரிசு |
|---|---|
| ஆவணங்கள் பதிவு செய்தல் மற்றும் உரித்துப் பதிவு செய்தல் | (அ) ஆவணம் பதிவு செய்தல் மற்றும் உரித்து பதிவு செய்தல் பற்றிய பதிவாளர் நாயகம் மூலம் சட்டமாக்கப்பட்ட கட்டளைகள்.<br>(ஆ) ஆவணம் பதிவு செய்தல் மற்றும் உரித்து பதிவு செய்தல் பற்றிய பதிவாளர் நாயகம் மூலம் காலத்திற்கு காலம் வழங்கப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள் மற்றும் ஆலோசனைகள். |
| விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் | அ) விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பற்றிய பதிவாளர் மூலம் சட்டமாக்கப்பட்ட கட்டளைகள்<br>(ஆ) விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பற்றிய பதிவாளர் நாயகம் மூலம் காலத்திற்கு காலம் வழங்கப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள் மற்றும் ஆலோசனைகள் |

08. **விண்ணப்பிக்கும் முறை.-**

i. விண்ணப்பம் செ.மீ. 22 × 29 அளவில் A-4 கடதாசிகளில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன், 1.0 - 6.0. வரையிலான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும், ஏனையவை இரண்டாவது மற்றும் மூன்றாவது பக்கங்களிலும் இருக்குமாறும் கடதாசிகளில் இரண்டு பக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதற்குரிய தகவல்கள் தமது கையெழுத்திலேயே தெளிவாக உட்புகுத்தப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்திற்கு இணங்காத விண்ணப்பங்கள் மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் அறிவித்தல் இன்றி இரத்துச் செய்யப்படும். உரிய விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியினை தன்வசம் வைத்திருத்தல் பிரயோசனமாகும்.

ii. உரிய விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் ஒப்பம் உறுதிப்படுத்தல் சிரேஷ்ட பிரதி பதிவாளர் நாயகம்/ பிரதி பதிவாளர் நாயகத்தினால் நிகழ்த்தப்படல் வேண்டும்.

09. **பரீட்சைக் கட்டணம்.-**

i. பரீட்சைக் கட்டணம் ரூ. 2,000.00 ஆகும்.

ii. இந்தப் பரீட்சைக் கட்டணம் விண்ணப்பம் பொறுப்பேற்கும் இறுதித் தினத்திற்கு முன்பதாக தீவின் எந்தவொரு இலங்கை வங்கி கிளையின் மூலம் பதிவாளர் நாயகம் அவர்களின் கணக்கு இலக்கம் 7041650 இற்கு வரவு வைக்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். இந்த கட்டணம் மீள செலுத்தப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை தன்வசம் வைத்திருத்தல் பிரயோசனமானதாகும்.

**கருத்திற் கொள்க :**

அ. அலுவலரினால் பூர்த்தி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் திணைக்களத்திற்கு இடைக்கும் திகதியிலேயே தினமுத்திரை பொறித்தல், விண்ணப்பதாரியினால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என திணைக்களத்தின் தலைவரினால் உறுதிப்படுத்தல், விண்ணப்பம் கையேற்கும் இறுதித் தினம் அல்லது அதற்கு முன்னர் நிகழ்த்தப்படல் வேண்டும். அல்வாறு மேற்கொள்வதற்கு இயலுமான விதம் விண்ணப்பத்தினை உரிய தினத்திற்கு முன்பதாக சமர்ப்பித்தல் விண்ணப்பதாரரின் பொறுப்பாகும்.

ஆ. பரீட்சை அனுமதிப்பத்திரம் விண்ணப்பதாரின் பெயரில், விண்ணப்பதாரரரின் அலுவலக முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படும்.

இ. நியமனத்திற்காக தகைமையினைப் பெறும் எவராவது விண்ணப்பதாரர் அந்த நியமனம் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் செல்லுப்படியாகும் ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளுக்கு இணங்க நியமனம் பெறுவதற்கு தகைமையற்றவர் எனக் கருதப்படுவாராயின் அல்லது திருப்திகரமற்ற வேலை நடத்தை காரணமாக நியமனத்தினை வழங்காதிருக்கும் உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு உரித்தானதாகும்.

ஈ. எந்தவொரு வெற்றிடத்தின் எண்ணிக்கையினை அல்லது வெற்றிடங்கள் அனைத்தினையும் நிரப்புதல் அல்லது நிரப்பாது விடல் இந்த ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்படாத எந்தவொரு விடயங்கள் பற்றியும் சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

10. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு முறைமை சட்டங்கள், காலத்திற்கு காலம் அரசாங்க சேவை ஆணைக்குழு சம்பந்தமாக வழங்கப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள் மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் நிறைவேற்று அலுவலக தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்க்கும் மற்றும் அதில் நிகழ்த்தப்படும் திருத்தங்களில் நிபந்தனைகள் இந்த பதவிக்காக உரித்தானதாகும்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தல்களில் மொழி மூலங்களுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது இணங்காமை உள்ளது எனத் தோன்றினால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி அறிவித்தலுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரசாங்க சேவைகள்ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ
இராஜாங்க அமைச்சு.

2021, மே 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை தரத்தின் I வகுப்பின் III ஆவது தரத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின் கீழ் ஆட்சேர்த்தல் - 2015(2020)**

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்.)

(சிங்களம்-1/தமிழ்-2/ஆங்கிலம் - 3)

1.0 1.1 முதல் எழுத்தினை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
உ-ம் : GUNAWARDHANA, M. G. B. S. K.

1.2 முதலெழுத்துடன் பெயர் (சிங்களம்/தமிழ்) :----.

1.3 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

1.4 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. சேவை நிலையம் மற்றும் முகவரி :

2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :---.

2.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களம்/தமிழில் எழுத்துக்களில்) :---.

2.3 பரீட்சைக்கு அழைக்கும் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

3. பால் :

பெண் -1
ஆண் - 2 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

4. பிறந்த திகதி :

ஆண்டு: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

5. விண்ணப்பிக்கும் திகதியன்று வயது :

வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

6. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

7.

(a)

(i) அரசாங்க சேவையில் சேவைக்கு முதலில் நியமிக்கப்பட்ட திகதி :----.

(ii) நியமிக்கப்பட்ட சேவை :----.

(iii) நியமனக் கடிதத்தின் இலக்கம் :----.

(iv) திகதி :----.

(b)

(i) பதிவாளர் சேவை II ஆம் வகுப்பிற்கு முதலில் நியமிக்கப்பட்ட திகதி :----.

(ii) நியமனக் கடிதத்தின் இலக்கம் :----.

(iii) திகதி :----.

(iv) பதிவாளர் சேவை II வகுப்பில் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ள திகதி :----.

(c) சேவைக் காலத்தில் நிகழ்ந்த ஒழுக்காற்று விடயங்கள் :

(d) சுற்றுநிருபத்தில் 6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப பதிவாளர் சேவை II ஆம் வகுப்பில் தகைமைகளைப் பூரணப்படுத்த வேண்டிய 2015.05.26 ஆந் திகதிக்கு செயற்திறனுள்ளதும் திருப்திகரமானதுமான சேவைக்காலம் : ..............................................................................................................

| ஒழுக்காற்றுக் கட்டளைகள் | குற்றப் பத்திரிகைக்கு இணங்க தவறு நிகழ்ந்த கால எல்லைகள் | ஒழுக்காற்றுக் கட்டளை அடங்கிய கடிதத்தில் இலக்கம் மற்றும் திகதி |
|---|---|---|
| | | |
| | | |

8.0 பணம் செலுத்திய பற்றுச்சீட்டினை நன்றாக ஒட்டவும்.

☐

(i) பணம் செலுத்திய வங்கி மற்றும் கிளை : .....................................................................

9. **விண்ணப்பதாரியின் சான்றிதழ் :**

2015.05.26 ஆந் திகதிக்கு கிட்டிய ஐந்து வருட காலங்களில் சம்பள ஏற்றங்கள் அனைத்தும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டது எனவும் அறிவித்தலில் 06 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க 2015.05.26 ஆந் திகதியில் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்துடனான மொத்த சேவைக் காலத்தினுள் எச்சரிக்கை தவிர்ந்த எவ்விதத்திலும் ஒழுக்காற்று தண்டனைக்கு நான் உட்படவில்லை எனவும் பிரதிக்கினை செய்கின்றேன். மேலும், பரீட்சை பெறுபேறு வழங்கல் சம்பந்தமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் சட்டமாக்கப்படும் அனைத்து ஒழுங்குவிதிகளுக்கும் நான் கட்டுப்படுகின்றேன் என இத்தால் பிரதிக்கினைப்படுத்துகின்றேன்.

----
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- சிரேஷ்ட பிரதி பதிவாளர் நாயகம் அல்லது பிரதி பதிவாளர் நாயகம் முன்னிலையில் விண்ணப்பதாரரினால் கையொப்பமிடல் வேண்டும்.

**கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்**

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் சேவை II ஆம் வகுப்பின் அலுவலரான திரு./ திருமதி/ செல்வி ....................................... என்பவர் .......................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பம் இட்டதாக உறுதிப்படுத்துகின்றேன்.

----
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்
கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி நிலை :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ....................................................................... ....... பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் பதிவாளர் சேவை II வகுப்பின் பதவியில் கடமையாற்றுவதற்காகவும், மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானவை எனவும் ....................... ஆந் திகதியில் முடிவுற்ற ஐந்து வருட கால எல்லையினுள் (சேவை அல்லது திணைக்கள பரீட்சை சித்தி பெறல் நிபந்தனையான சம்பள ஏற்றம் தவிர்ந்த) அவரின் சம்பள ஏற்றங்கள் அனைத்தினையும் பெற்றுள்ளதாகவும், சுற்றுநிருபத்தில 06 ஆவது பந்திக்கு இணங்க .................... ஆந் திகதியில் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தினை உடையவர் எனவும், மொத்த சேவைக் கால எல்லையினுள் மேற்கொள்ளப்பட்ட தவறுக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) எந்த விதத்திலும் ஒழுக்காற்று தண்டனைக்கு அவர் உட்படவில்லை எனவும், உரிய சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து ஒழுங்குவிதிகளின் பிரகாரம் அவர் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ளார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி நிலை :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரையினை இடவும்.)

*6-281*

---

## சுகாதார அமைச்சு

*அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021*

01. அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2021, செத்தெம்பர் மாதம் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. சுகாதார அமைச்சு, மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு, ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவை, தொற்றுநோய் மற்றும் கொவிட் தொற்றுநோய் கட்டுப்படுத்தல் இராஜாங்க அமைச்சு, சுதேச மருத்துவ மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகளின் அபிவிருத்தி மற்றும் சமூக ஆரோக்கியம் தொடர்பான இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் கீழுள்ள மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் பணியாற்றுகின்ற, பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் பிரகாரம் ஆரம்ப நிலை PL தொகுதியின் சம்பள குறியீட்டின் கீழ் சம்பளம்

பெறுகின்ற அலுவலர்கள் மற்றும் MN-01-2016 சம்பள குறியீட்டின் கீழ் சம்பளம் பெறுகின்ற மற்றும் அப்பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்காக இப்பரீட்சை கீழே குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் நடைபெறும். நகரங்கள் மற்றும் அவற்றுக்குரிய இலக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன. போதியளவு விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் ஏதேனும் பரீட்சை நிலையங்களை இரத்து செய்வதற்கும் பரீட்சார்த்திகளின் இரண்டாவது விருப்பத் தெரிவினை கவனத்தில் கொண்டு வேறு ஒரு பரீட்சை நிலையத்தினை அவர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிப்பதற்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அவரது தற்றுணிபின் பேரில் அதிகாரமுண்டு.

| நகரம் | நகர இலக்கம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|---|
| கொழும்பு | 01 | கிளிநொச்சி | 14 |
| கம்பஹா | 02 | மட்டக்களப்பு | 15 |
| களுத்துறை | 03 | அம்பாறை | 16 |
| கண்டி | 04 | திருகோணமலை | 17 |
| மாத்தளை | 05 | குருநாகல் | 18 |
| நுவரெலியா | 06 | புத்தளம் | 19 |
| காலி | 07 | அநுராதபுரம் | 20 |
| மாத்தறை | 08 | பொலநறுவை | 21 |
| அம்பாந்தோட்டை | 09 | பதுளை | 22 |
| யாழ்ப்பாணம் | 10 | மொணராகலை | 23 |
| மன்னார் | 11 | இரத்தினபுரி | 24 |
| முல்லைத்தீவு | 12 | கேகாலை | 25 |
| வவுனியா | 13 | | |

03. பரீட்சை நடாத்துவதற்காகவும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவதற்காகவும் பரீட்சை நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். இந்த விதிகளை மீறுபவர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் எந்தவொரு தண்டனைக்கும் ஆளாக வேண்டி ஏற்படும்.

04. நிலவுகின்ற வெற்றிடங்களின் கீழ் நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்குவரும் திகதி என்பன சுகாதார அமைச்சு செயலாளரினால் தீர்மானிக்கப்படும். சில வெற்றிடங்களை அல்லது வெற்றிடங்களை முழுமையாக நிரப்புவதற்கும் /நிரப்பாமல் இருப்பதற்கும் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

05. மொழி மூலம்:-இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் தமது விருப்பின் பிரகாரம் யாதேனுமொரு மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். அவ்வாறு விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

06. சம்பளம் : இலக்கம் 03/ 2016 மற்றும் 2016.02.25 ஆந் திகதியுடைய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III, II மற்றும் I தரங்களுக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூ. 28,940.00– 10 × 300 - 11 × 350 - 10 × 560 - 10 × 660 - ரூ. 47,990.00 ஆகக் காணப்படுவதுடன், அச்சம்பளமானது உங்களுக்கு 2020.01.01 ஆந் திகதி முதல் உரித்தாகும். மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நியமனம் அமுலுக்குவரும் தினத்திலிருந்து சம்பளம் வழங்கப்படும். எவ்வாறாயினும் ரூ. 31,940.00 ஐத் தாண்டிச் செல்வதற்காக தரம் II இற்கான பதவி உயர்வினையும், ரூ. 35,790.00 ஐத் தாண்டிச் செல்வதற்காக தரம் I இற்கான பதவி உயர்வினையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படுகின்ற பிற கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**குறிப்பு** : நியமனம் வழங்கப்படுகின்ற காலப்பகுதியில் நிலவுகின்ற சம்பள ஏற்ற சட்ட திட்டங்களின் கீழ், சம்பள அதிகரிப்பு நன்மைகள் நியமனம் பெற்றவர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும்.

07. **சேவை நிபந்தனைகள் :**

(i) நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்குவரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் நிலவும் வெற்றிடங்களில் சிலவற்றை அல்லது அனைத்தையும் நிரப்புவதற்கோ அல்லது நிரப்பாமல் இருப்பதற்கோ நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

(ii) அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்துகின்ற பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2053/18 மற்றும் 2018.01.09 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள

நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அச்சேவைப் பிரமாணக் குறிப்பில் இதன் பின்னர் கொண்டுவரப்படுகின்ற திருத்தங்களுக்கும் தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகளுக்கும், இலக்கம் 1589/30 மற்றும் 2009.02.20 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கும், கட்டுப்படும் விதத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பரீட்சார்த்திகள் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவார்.

(iii) இப்பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் நியமனத் தினத்திலிருந்து ஒரு வருடத்திற்கு பதில் கடமை ஆற்ற வேண்டும் என்ற அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும். அப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்து 03 வருடங்களுக்குள் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைத் தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iv) இப்பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் நியமனம் பெறுகின்ற விண்ணப்பதாரர்கள் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு ஏற்ப, இலங்கையின் எந்தவொரு மாகாணத்திற்கும் நியமனம் பெறுவதற்கு கட்டுப்படுவதுடன், அவர்களுக்கு நியமனம் வழங்கும் போது எக்காரணம் கொண்டும் தற்போது பணியாற்றுகின்ற அலுவலகத்திற்கு நியமனம் வழங்கப்பட மாட்டாது.

(v) இந்நியமனம் வழங்கப்படுகின்ற தினத்தில் இருந்து நியமனம் வழங்கப்பட்ட அந்த அலுவலகத்தில் ஆகக் குறைந்தது 03 வருடங்கள் கட்டாயமாக பணியாற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படுகின்ற யாதேனுமொரு விசேட காரணத்தின் மீது அக்காலம் முடிவடைவதற்கு முன்னர் எவரேனுமொரு உத்தியோகத்தரை இடமாற்றம் செய்ய வேண்டிய தேவை ஏற்படின் நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் உண்டு.

(vi) அரச கரும மொழி – அரசகரும மொழியல்லாத வேறொரு மொழியில் சேவைக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் சேவையில் நிரந்தரமாக்குவதற்கு முன்னர் அரசகரும மொழியொன்றில் தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

மற்றைய அரசகரும மொழி – நியமனம் செய்யப்பட்டு 03 வருடங்களைத் தாண்டுவதற்கு முன்னர் பொது நிருவாகச் சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதற்கு விளைவாந்தன்மையான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் இரண்டாம் அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(vii) அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர்களின் சாதாரண கடமை நேரம் வருடத்தின் அனைத்து நாட்களிலும் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 வரையாகும். எனினும் கடமை தேவையின் நிமித்தம் மற்றும் கடமையின் தன்மைக்கேற்ப மேற்படி நேரத்தில் மாற்றம் ஏற்படலாம். மேலும் கடமை தேவையின் நிமித்தம் இரவு நேரக் கடமையிலும் ஈடுபடுத்தலாம். அத்துடன் கடமையின் தன்மைக்கேற்ப மேலதிக கடமையில் ஈடுபடுமாறும் உத்தரவிடலாம். நியமனம் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் வருடத்தின் முந்நூற்றி அறுபத்தி ஐந்து (365) நாட்களிலும் கடமையாற்றுவதற்கு கட்டுப்படுகின்றனர்.

(viii) சுகாதார அமைச்சு செயலாளரினால் நிர்ணயிக்கின்ற கடமைகளை நிறைவேற்றுகின்ற இந்த உத்தியோகத்தர்களினால் ரூ.5000.00 பெறுமதியான பிணை தொகையொன்றினை வைப்புச் செய்தல் வேண்டும்.

(ix) கடமையின் தேவைக்கேற்ப சுகாதார நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளில் தொழில் புரியும் உத்தியோகத்தர்கள் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசாங்க விடுமுறை நாட்கள் என்பவற்றிலே பணியாற்றுமாறு உத்தரவிடப்படலாம். அதற்குப் பதிலாக மேலதிக நேரக் கொடுப்பனவு அல்லது விடுமுறைக்கால கொடுப்பனவு அல்லது பதில் விடுமுறை என்பவற்றில் ஏதாவது ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு– மாகாண அரசாங்க சேவை உத்தியோகத்தர்கள் இப்பரீட்சைக்குக் தோற்றுவதற்கு அனுமதி இல்லை.

08. **ஆட்சேர்ப்பு தகைமைகள்**

8.1 **கல்வித் தகைமைகள்**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு இரண்டு திறமைச் சித்திகளுடன் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி மற்றும் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

8.2 **தொழில்சார் தகைமை** : ஏற்புடையதன்று.

8.3. **அனுபவம் :**
விண்ணப்ப முடிவுத் திகதியில் உள்ளவாறு நிரந்தரப் பதவி ஒன்றின் கீழ் ஆகக் குறைந்தது 05 வருட தொடர்ச்சியான செயற்பாட்டு ரீதியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். பொது சேவை ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட நியதிகளின் பிரகாரம் தண்டணைக்கு உட்பட்டிருக்கக்கூடாது. மேலும் அந்த விடயம் திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(யாதேனுமொரு பதவியில் நிரந்தர நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் சேவையாற்றியுள்ள அல்லது யாதேனுமொரு பதவிக்கு நிரந்தர நியமனம் செய்வதற்காக நிபந்தனைகளின் கீழ் சேவையாற்றியுள்ள பயிற்சி காலப்பகுதி மேற்படி தகைமை பெறுவதற்கான ஐந்து வருட காலப் பகுதியில் கணிப்பிடப்பட மாட்டாது. அத்துடன் யாதேனுமொரு பதவிக்கு நிரந்தர நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் சேவையாற்றியுள்ள தற்காலிக/அமய அடிப்படையிலான சேவைக் காலமானது மேற்படி தகைமை பெறுவதற்கான ஐந்து வருட காலத்தினுள் கணிப்பிடப்பட மாட்டாது.)

8.4 **உடல்சார் தகைமை:-**
சகல விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உளசார் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

8.5 **ஏனையவை:-**

(i) சுகாதார அமைச்சு,மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு, ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவை, தொற்றுநோய் மற்றும் கொவிட் தொற்றுநோய் கட்டுப்படுத்தல் இராஜாங்க அமைச்சு, சுதேச மருத்துவ மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகளின் அபிவிருத்தி மற்றும் சமூக ஆரோக்கியம் தொடர்பான இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின கீழுள்ள சுகாதார நிறுவனங்களில் பணியாற்றுகின்ற, நிரந்தர பதவியுடைய, அப்பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் பிரகாரம் ஆரம்ப மட்டத்தைச் சேர்ந்த PL தொகுதியின் சம்பள குறியீட்டின் கீழ் சம்பளம் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் MN-01-2016 சம்பள குறியீட்டின் கீழ் சம்பளம் பெறுகின்ற உத்தியோகத்தர்களாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற இறுதி தினத்தில் உள்ளவாறு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு -**

1. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் பத்திரங்கள் கோருகின்ற இறுதித் தினத்திற்கு முந்திய ஐந்து வருட காலப் பகுதியினுள் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். இங்கு திருப்திகரமான சேவை என்பதன் மூலம் பின்வரும் விடயங்கள் கருதப்படுகின்றன.

   (i) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் தினத்திற்கு முந்திய ஐந்து வருட காலத்தினுள் கிடைக்கப்பெறுகின்ற அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல்.

   (ii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி தினத்திற்கு முந்திய 05 வருட காலப் பகுதியினுள் எதுவித ஒழுக்காற்று தண்டனைக்கும் ஆளாகாது இருத்தல்.

2. நியமனம் பெறுவதற்கு விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்படின் அவரை விடுவிப்பதற்காக திணைக்களத் தலைவரின் இணக்கம் காணப்படல் வேண்டும்.

3. சுகாதார அமைச்சு, அவற்றின் கீழுள்ள மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் பணியாற்றுகின்ற தற்காலிக மற்றும் அமய ஊழியர்கள் ஆகியோர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையற்றவர்களாவர்.

4. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை தாம் பூர்த்தி செய்துள்ளதாக விண்ணப்பிப்பதற்கு முன்னர் விண்ணப்பதாரர்கள் திருப்தியடைதல் வேண்டும். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் இன்றி இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் பரீட்சையில் போதிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட போதிலும் நியமனம் பெறுவதற்கு தகுதியற்றவர்களாவார்கள்.

09. **விண்ணப்பங்கள் -**

(i) இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் சகல விண்ணப்பதாரர் களும் A4 அளவிலான (செ.மீ. 21×29) தாளினைப் பயன்படுத்தி, 01 முதல் 04 வரையிலான பந்திகளை முதல் பக்கத்திலும், இலக்கம் 05 முதல் 08 வரையிலான பந்திகளை இரண்டாம் பக்கத்திலும் ஏனைய பந்திகளை மூன்றாம் பக்கத்திலும் உள்ளடக்கப்படும் வகையில் 03 பக்கங்களில் தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

(ii) சகல விண்ணப்பதாரர்களும் முறையாக பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை 2021.07.16 ஆந் திகதிக்கு முன்னர் தாபனத் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அவரினால் அனைத்து விண்ணப்பதாரர்களினாலும் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையுமென தனிப்பட்ட முறையில் உறுதிப்படுத்தியதன் பின்னர் விண்ணப்ப படிவங்களை "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சைகள் அமைப்பு கிளை, பரீட்சை திணைக்களம், த. பெ. இ. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2021.07.30 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2021........(பரீட்சைக்கு தோற்றவுள்ள மாவட்டத்தைக் குறிப்பிடவும்)" எனக் குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும். (விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றினை உங்களிடம் வைத்துக் கொள்வது பயனுடையதாக அமையும்).

(iii) மேலும் பரீட்சை தலைப்பானது, விண்ணப்பங்கள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தயாரிக்கப்படும்போது பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் அவ்வாறே தமிழ் விண்ணப்பத்தில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் இறுதி தினத்தன்று இருந்த விண்ணப்பதாரரின் பதவி மற்றும் பணியாற்றும் இடம் என்பன பரீட்சை தொடர்பான அனைத்து விடயங்களுடனும் தொடர்புடையதாகக் காணப்படுவதுடன், விண்ணப்பம் அனுப்பியதன் பின்னர் அது தொடர்பாக ஏற்படுகின்ற மாற்றங்கள் பற்றி கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

**கவனிக்க:** தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முழுப்பெயருக்கு மாத்திரமே நியமனம் வழங்கப்படுவதனால் பெயரை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். நியமனம் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பெயரில் திருத்தம் செய்வதற்கு அல்லது யாதேனுமொரு பகுதியை சேர்ப்பதற்கு /அகற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

10. **பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணம் ரூ. 600.00 ஆகும். இத்தொகையினை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் திரட்டல் கணக்கு இலக்கம் 20-03-02-13 இன் கீழ் வரவு வைக்கப்படும் வகையில் இலங்கையிலுள்ள ஏதாவதொரு அஞ்சல்/உப அஞ்சல் அலுவலகத்தில் மாத்திரம் செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி அனுப்புதல் வேண்டும். (பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றினை நீங்கள் தம்வசம் வைத்துக்கொள்ளல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது. காசுக் கட்டளை மற்றும் முத்திரை என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

11. விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் அவர்களது தகைமைகளைப் பரீட்சிக்கும் போது உரிய தகைமைகள் இல்லையென தெரியவரும் பட்சத்தில் குறித்த விண்ணப்பதாரரது பரீட்சைக்குரிய தகைமை இரத்துச் செய்யப்படும்.

12. **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

(i) வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளார்கள் எனும் ஊகத்தின் அடிப்படையில் உரிய பரீட்சை கட்டணத்தைச் செலுத்தி உரிய பற்றுச் சீட்டுடன் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை விண்ணப்பம் முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பியுள்ள அனைவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரம் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பி வைத்தவுடன், அது பற்றி குறிப்பிட்டு பரீட்சை திணைக்களத்தினால் அறிவித்தல் ஒன்று செய்திப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எவரேனுமொரு விண்ணப்பதாரருக்கு அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்களின் பின்னரும் அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாத பட்சத்தில், பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றினை குறிப்பிட்டு அதுபற்றி பரீட்சை திணைக்களத்தின் நிறுவன பரீட்சைகள் அமைப்பு கிளைக்கு அறிவித்து வினாவுதல் வேண்டும். (கொழும்புக்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரர்களாயின் பரீட்சை அனுமதிப் பத்திரத்தை அவர்களுக்கு அனுப்ப வேண்டிய அவர்களது பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு

மேற்படி விபரங்களுடன் கோரிக்கை கடிதமொன்றை பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட பெக்ஸ் இலக்கத்திற்கு சமர்ப்பித்து வினவுதல் வேண்டும்.) அவ்வாறு வினவும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் ஏதாவதொரு தகவலை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உங்களிடம் விண்ணப்பப்படிவம், பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு, பதிவுத்தபால் பற்றுச்சீட்டு ஆகியவற்றின் பிரதிகளை வைத்துக்கொள்வது பயனுடையதாகும்.

(ii) விண்ணப்பப்பத்திரத்திலும், பரீட்சை அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாராகளும் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவரின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். மாகாண மட்டத்தில் நிறுவுகின்ற பரீட்சை நிலையத்தினுள், தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படும். அவ்வாறு பரீட்சைக்குத் தோற்றும் போது முதலில் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட பரீட்சை அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.பரீட்சை அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட மாட்டாது.

13. விண்ணப்பதாரர்களின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றினை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) தேசிய அடையாள அட்டை;
(ii) செல்லுபடியான கடவுச் சீட்டு;
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

பரீட்சார்த்திகள் அவர்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதன் பொருட்டு அவர்களது முகம் மற்றும் காதுகளை மறைக்காதவாறு பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு மறுப்பு தெரிவிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தது தொடக்கம் அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சார்த்தியை அடையாளம் காணும் வகையில் மேற்பார்வையாளருக்கு இயலக்கூடியதாக முகத்தையும் காதுகளையும் மூடாது பரீட்சை மண்டபத்தினுள் இருத்தல் வேண்டும்.

14. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்திலுள்ள அலுவலருக்கு பரீட்சைக்கு தோற்றக்கூடிய வகையில் திணைக்களத் தலைவர் கடமை லீவினை வழங்குதல் வேண்டும். பிரயாண செலவு வழங்கப்படமாட்டாது.

15. **போலியான தகவல்கள் வழங்கினால் தண்டனை**

விண்ணப்பப்படிவங்களை நிரப்பும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் சட்ட திட்டங்களின் பிரகாரம் யாதேனுமொரு பரீட்சார்த்தி தகைமையற்றவரென கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தித் தன்மையை இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று எந்தச் சந்தர்ப்பத்திலும் பொய்யானதென தெரியவரும் பட்சத்தில் அவரை அரசாங்க சேவையில் இருந்து விலக்க முடியும்.

16. **பரீட்சை நடைமுறை :**

(i) பரீட்சை பாடம் மற்றும் அந்தந்த பாடத்திற்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் பின்வருமாறு.

| வினாத்தாள் | | காலம் | மொத்த புள்ளிகள் | சித்தி அடைவதற்குப் பெற வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|
| (1) | மொழித் தேர்ச்சி மற்றும் அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவைகள் தகுதிகாண் பரீட்சை | 2½ மணித்தியாலம் | 100 | 40 |
| (2) | உளச்சார்பு | 01 மணித்தியாலம் | 100 | 40 |

(ii) எல்லா எழுத்து மூல வினாத்தாள்களிலும் தெளிவற்ற கையெழுத்துக்கள் மற்றும் சொற்களின் எழுத்துப் பிழை என்பவற்றிற்காக புள்ளிகள் குறைக்கப்படும். விண்ணப்பதாரர்கள் தாம் விரும்பிய ஒரு மொழியில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் குறைந்த பட்சம் ஐம்பது (50%) வீதமாவது பெற்றுக்

கொள்ளல் வேண்டும். திறமையின் ஒழுங்கு முறை மற்றும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை என்பவற்றிற்கேற்ப நியமனம் வழங்கப்படும்.

17. **பாடத் திட்டம்** :

| *வினாத்தாள்* | *பாடத் திட்டம்* |
|---|---|
| (1) மொழித் தேர்ச்சி மற்றும் முகாமைத்துவ உதவியாளர் சேவைகள் தகுதிகாண் பரீட்சை | பரீட்சார்த்திகளின் கருத்துத் தெரிவித்தல், கிரகித்தல், புரிந்து கொள்ளல், எழுத்து வடிவம், மொழி மற்றும் கட்டுரை, வழங்கப்படுகின்ற தகவல்களின் பிரகாரம் கடிதம் ஒன்றினை எழுதுவதற்கான திறமை, தரப்பட்டுள்ள விடயத்தை சுருக்கி எழுதுதல், தரப்பட்டுள்ள பல சொற்கள் அடங்கிய கருத்தினை தனி வாக்கியத்தில் எழுதுதல், தரப்பட்டுள்ள தரவுகளின் படி வரைபட அட்டவணையை தயாரித்தல் மற்றும் எளிய இலக்கண மொழி நடை பற்றிய அறிவினை பரீட்சிப்பதற்கான பாட அறிவினை உள்ளடக்கிய வினாக்களையும்,<br><br>அலுவலக ஆவணங்கள் தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றிய அடிப்படை சட்ட திட்டங்கள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் ஒருவரினால் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் அடங்கிய கடிதமொன்று தொடர்பாக செயற்பட வேண்டிய விதம் என்பன பற்றி முகாமைத்துவ உதவியாளர் ஒருவரின் கடமை பற்றி பரீட்சார்த்தி ஒருவரிடம் காணப்பட வேண்டிய அறிவினை பரீட்சிக்கும் வினாக்களையும் இவ்வினாத்தாள் கொண்டிருக்கும்.<br><br>அலுவலகம் ஒன்றிலே பயன்படுத்துகின்ற அழைப்பு தினப் பதிவேடு, வவுச்சர், அசைவுப் பதிவேடு, வரவு இடாப்பு, தின முத்திரை, அலுவலக முத்திரை, தபால் பொதி உள்ளிட்ட உபகரணங்கள் பற்றியும், அவற்றின் மூலம் கிடைக்கப் பெறுகின்ற பயன்கள் பற்றியும் பரீட்சார்த்தியின் அறிவினைப் பரீட்சிக்கின்ற வினாக்களையும் இந்த வினாத்தாள் கொண்டிருக்கும். |
| (2) உளச்சார்பு | இவ்வினாத்தாள் விண்ணப்பதாரரின் கணித அறிவு, தர்க்க ரீதியான அறிவு, பொது அறிவு என்பவற்றினை அளவிடக் கூடியதாக தயாரிக்கப்பட்ட விடய அறிவு தொடர்பான வினாக்களைக் கொண்டிருக்கும். |

*(பரீட்சார்த்தியின் உத்தியோகபூர்வ கடமை பணிகளை நிறைவேற்றுவதற்கான தகைமைகள் மற்றும் திறமைகள் என்பவற்றினைப் பரீட்சிப்பதற்காக இந்த வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.)*

18. விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் ஒன்றினை வழங்குதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையைப் பூர்த்தி செய்துள்ளார் என்று ஏற்றுக்கொள்வதாக கருதக்கூடாது.

19. இங்கு குறிப்பிடப்படாத வேறு யாதேனுமொரு விடயம் தொடர்பாக, சுகாதார அமைச்சு செயலாளரினால் தீர்மானிக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

20. இந்த சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில ஊடக அறிவித்தல்களுக்கு இடையே யாதேனுமொரு முரண்பாடு இருப்பின், அதன் போது சிங்கள மொழி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வைத்தியர் எஸ். எச். முனசிங்ஹ,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
“சுவசிறிபாய”,
இலக்கம் 385, வண. பத்தேகம விமலவன்ஷ தேரர் மாவத்தை,
கொழும்பு 10.
2021, யூன் 12.

மாதிரி விண்ணப்பப் படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்காக)

**சுகாதார அமைச்சின் அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021**

**Limited Competetive Examination for Recruitment to Grade III of Public Health Management Assistant's Service - 2021**

(வழங்கப்பட்டுள்ள கூட்டியினுள் சரியான குறியீட்டை/ இலக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிடவும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டியினுள் எழுதவும்)

பரீட்சைக்குத் தோற்றுவிப்பதற்கு விண்ணப்பிக்கும் நகரம்
முதலாவது விருப்பம் ☐
இரண்டாவது விருப்பம் ☐
(உரிய நகரத்துக்குரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

1.0 1.1 முழுப்பெயர்: --------------
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

1.2 முழுப் பெயர்:-----------
(சிங்களம்/தமிழ் எழுத்தில்)

1.3. பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி:------------------
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

1.5 விவாகமானவரா /விவாகமாதவரா ? : ……………………………………………..

1.6 இனம் : ……………………………………………..

2.0 சேவை நிலையம் மற்றும் முகவரி:

2.1 அலுவலகத்தின் /திணைக்களத்தின் /நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி: -----------------------
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

3.0 3.1 பால் நிலை - ஆண்- 0 பெண்- 1 ☐
(உரிய இலக்கத்தை கூட்டியினுள் எழுதவும்)

3.2 கைத்தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

3.3 பிறந்த திகதி:
ஆண்டு: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி : ☐☐

3.4 2021.07.16 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

4.0 கல்வித் தகைமைகள்

4.1 க.பொ.த. (சா.த.) பரீட்சை பற்றிய விபரம்:
(i) பரீட்சையின் ஆண்டு: ------------
(ii) பரீட்சை சுட்டிலக்கம்: -------------
(iii) பெறுபேறு:

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

5.0 நீங்கள் என்றாவது யாதேனுமொரு நீதிமன்றத்தினால் ஏதேனுமொரு குற்றத்திற்காக குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா?
(உரிய கூட்டியினுள் (√) எனும் அடையாளமிடுக. ஆம் எனின் விளக்கவும்.) ஆம் ☐ இல்லை ☐

----------------------------------------
------------------------------------------

6.0 தொழில் விபரம் :-

6.1 நீங்கள் தற்போது பணியாற்றும் நிறுவனத்தின் பெயர் : ------------------------------------

6.2 தற்போது வகிக்கும் தொழிலின் பதவிப் பெயர் : -------------------------------------

6.3 தற்போது வகிக்கும் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி : ------------------------------------

6.4 தற்போது வகிக்கும் பதவி நிரந்தரமானதா அல்லது தற்காலிகமானதா என்பது பற்றி : -----------------

6.5 தற்போது வகிக்கும் பதவியில் பதவி நிரந்தரமாக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி : ----------------------

6.6. சேவையில் நிரந்தரமாக்குவதற்கு தகைமை பெற்ற திகதி : -------------------------------

6.7 தற்போது வகிக்கும் பதவியில் சேவையை நிரந்தரமாக்கி வழங்கப்பட்ட கடிதத்தின் குறிப்பு இலக்கம் மற்றும் திகதி :--------------------

6.8 தற்போது பெறுகின்ற அடிப்படைச் சம்பளம் : ---------------------

6.9. சம்பள அளவுத்திட்டம் (இலக்கம் 03/2016 மற்றும் 2016.02.25 ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம்): PL-1-2016, PL -2-2016, PL -03-2016 /MN - 01 - 2016 (தேவையற்றவற்றை வெட்டிவிடவும்.)

6.10 தற்போது வகிக்கும் பதவியானது ஓய்வூதிய உரித்துடையதா என்பது பற்றி : ------------------------

6.11. 2021.07.16 ஆந் திகதியில் உள்ளவாறு தற்போது வகிக்கும் பதவிக்குரிய சேவைக் காலம் : ----------

7.0 பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு பற்றிய விபரம் :

i. பரீட்சைக் கட்டணம் செலுத்திய வங்கிக் கிளை: ------------------

ii. பற்றுச் சீட்டு இலக்கம் மற்றும் திகதி : --------------------------

iii. செலுத்திய தொகை: ---------------------

| |
|---|
| பற்றுச் சீட்டினைக் கழறாதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச் சீட்டின் பிரதி ஒன்றினை தம்வசம் வைத்திருத்தல் பயனுடையதாக அமையும்) |

8.0 **விண்ணப்பதாரியின் உறுதிமொழி**:

அ) இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானதும் சரியானதுமென உறுதியளிக்கின்றேன்.

ஆ) இங்கு யாதேனுமொரு பகுதியை பூர்த்தி செய்யாமை மற்றும்/அல்லது பிழையாகப் பூர்த்தி செய்தமை தொடர்பில் ஏற்படும் நட்டத்தைப் பொறுப்பேற்க இணக்கம் தெரிவிக்கின்றேன்.

இ) இங்கு அனைத்துப் பகுதிகளையும் சரியாக நிரப்பியுள்ளதாக உறுதியளிக்கின்றேன். என்னால் இதில் வழங்கப்பட்ட விபரங்கள் பொய்யானதென நிரூபிக்கப்படும் பட்சத்தில், தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் தகுதியற்றவராவேன் என்பதையும் மற்றும் நியமனம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் சேவையில் இருந்து பதவி விலக்கப்படுவேன் என்பதனையும் அறிந்துவைத்துள்ளேன்.
மேலும்,

ஈ) பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கும் தீர்மானங்களுக்கும் நான் கட்டுப்படுவதாகவும் உறுதியளிக்கின்றேன்.

------------------------------
திகதி: -------------------- விண்ணப்பதாரியின் கையொப்பம்.
(திணைக்களத் தலைவர் முன்னிலையில்)

**குறிப்பு** : தமது திணைக்களத் தலைவர் அல்லது அந்த திணைக்களத் தலைவரின் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் ஒருவரின் முன்னிலையில் விண்ணப்பதாரியினால் கையொப்பம் இடுதல் வேண்டும்.

9.0 **விண்ணப்பதாரியின் கையொப்பத்தைஉறுதிப்படுத்தல்:**

இந்த அலுவலகத்தின் உத்தியோகத்தர் ஒருவரான மற்றும் நான் தனிப்பட்ட முறையில் அறிந்த திரு./திருமதி/செல்வி --- -------------------- அவர்கள் -------------------- ஆந் திகதியன்று என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

----------------------------

திகதி: ------------------- கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப் பெயர்: --------------------------------------------
பதவி : -----------------------------------
முகவரி: ------------------------------------
(பதவி முத்தரையிட்டு உறுதிப்படுத்தவும்.)

10. **திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தல்**

10.1 இந்த விண்ணப்பதாரரான/ விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ----------------------- அவர்கள் இந்த அலுவலகத்தில் பணியாற்றும் ஒருவர் எனவும்,

10.2 அவர் நிரந்தர பதவி வகிப்பவர் எனவும்,

10.3 அவர் நிரந்தர பதவி ஒன்றில் 2021.07.16 ஆந் திகதியில் உள்ளவாறு சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் எனவும்,

10.4 நிரந்தர பதவி ஒன்றின் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டு கடிதமொன்று அவருக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும்,

10.5 அவர் 2021.07.16 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆகக் குறைந்தது 05 வருட தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவையினைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும்,

10.6 அவர் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 8.0 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளின் உள்ளே காணப்படுகின்ற சம்பளத்தினைப் பெற்று வருவதாகவும் அல்லது சம்பள அளவுத் திட்டத்தில் உள்ளதாகவும்,

10.7 அவரது பணி மற்றும் நடத்தை என்பன 2021.07.16 ஆந் திகதிக்கு முந்திய 05 வருட காலத்தினுள் திருப்திகரமாக அமைந்துள்ளது எனவும்,

10.8 இந்த பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் நியமனம் ஒன்றிற்காக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் அவரை தற்போது வகிக்கின்ற பதவியில் இருந்து விடுவிப்பதாகவும்,

10.9 பரீட்சைக் கட்டணமாக ரூ.600.00 தொகை செலுத்தப்பட்டுள்ளது எனவும்,

10.10 அவரது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் இத்திணைக்களத்தில் உள்ள அவரது ஆள் விபரக் கோவையின் பிரகாரம் சரிபார்க்கப்பட்டுள்ளன எனவும் மற்றும் இந்தப் பரீட்சைக்குரிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியானவர் எனவும், நான் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்

திகதி: -------------------

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப் பெயர்: --------------------------------------------
பதவி: -----------------------------------
முகவரி: -----------------------------------
(பதவி முத்தரையிட்டு உறுதிப்படுத்தவும்.)

**குறிப்பு:**

(1) திணைக்களத் தலைவர் அல்லது அவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு உரிய அதிகாரமளிக்கப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் மாத்திரம் இதனை சான்றுப்படுத்தல் வேண்டும். சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்து விதத்திலும் சரியானதென சான்றுப்படுத்தும் அலுவலர் தனிப்பட்ட முறையில் திருப்திப்படுதல் வேண்டும்.

(2) தகைமை பற்றிய அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்திராத விண்ணப்பதாரர்கள் இருப்பின் அவர்களது விண்ணப்பங்களை சமர்ப்பித்தலாகாது.

6-346

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.